- **Network Consistency:** The uniformly high standards across all 41 schools demonstrate the strong educational framework of the Franciscan Sisters network.

Rev. Sr. **Susai Mary, FSJ**
General Councilor,
Education Co-Ordinator

## 1. சகாய மாதா மருந்தகம் – வீரளூர்:





A. 06.04.2025 அன்று வீரளூரில் அமைந்திருக்கும் நம் சகாய மாதா மருந்தகம் மற்றும் மருந்தக ஆய்வகம் (Lab) புதுபிக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. நம் சபை தலைமை அன்னை M. Arockiam அவர்கள் புதுபிக்கப்பட்ட மருந்தகத்தை திறந்து வைத்தார்கள். அனைத்து ஆய்வக கருவிகளுடன் புதுபிக்கப்பட்ட மருந்தக ஆய்வகம் (Lab) இதனை இல்லத்தலைவி மற்றும் மருந்தக பொறுப்பாளர் Sr. Leo Josephine Rita அவர்கள் திறந்து வைத்தார்கள். Rev. Fr. Alexander Thomas SDB, Parish Priest அவர்களால் சிறப்பு திருப்பலி ஆற்றி மருந்தகமும், ஆய்வகமும் (Lab) அர்ச்சிக்கப்பட்டது. திருப்பலியின் போது அருட்தந்தை அவர்கள் நம் சபை தலைமை அன்னைக்கும், சபைக்கும் நன்றிக் கூறினார்கள். ஏனெனில் இம்மருந்தகம் பல்லாயிரம் ஏழை மக்களுக்கு உதவியாக இருக்கிறது, குறிப்பாக புதிதாக அமைக்கப்பட்ட மருந்தக ஆய்வகம் (Lab) மிகவும் பயனுள்ள வகையில் அமையும் ஏனெனில் மக்கள் Lab Test செய்வதற்கு வெகுதூரம் பயணம் செய்ய வேண்டும் என்றார்கள். இதற்கான பொருளாதார உதவியினை தாராளமாக வழங்கிய MZF, Germany அவர்களுக்கு எங்களின் இதயம் நிறைந்த நன்றிகள். இதற்கான ஏற்பாடுகளை செய்த Sr. Dr. Mary Jenova அவர்களுக்கும் எங்களின் நன்றிகள்.

## B. இலவச சிறப்பு மருத்துவ முகாம் – வீரளூர்:

06.04.2025 அன்று வீரளூரில் அமைந்திருக்கும் நம் சகாயமாதா மருந்தகத்தில் இலவச மருத்துவ முகாமானது மிக சிறப்புடன் நடைப்பெற்றது. இம்முகாமில் Dr. Saravana Kumar, Sr. Dr. Mary Jenova ஆகிய மருத்துவர்கள் 200க்கும் மேற்பட்ட நோயாளிகளை பார்வையிட்டனர். இலவசமாக மருந்துகள், Lab Test அனைத்தும் St.Thomas Hospital மூலமாக வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை செய்த Sr. Sebastine, Sr. Inba Rita, Sr. Elizabeth அவர்களுக்கும் நன்றிகள். மருந்தக பொறுப்பாளர் Sr. Leo Josephine Rita, Sr. Daisy Indira Mary மற்றும் Sr. Belsy இவர்களுக்கு எங்களின் பாராட்டுகளும், நன்றிகளும்.





## 2. இலவச மருத்துவ முகாம்: Loyola College



08.04.2025 அன்று காலை 9 மணி முதல் 4 மணி வரை Loyola College–யில் இலவச மருத்துவமுகாம் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக St. Thomas மருத்துவமனையின் மூலம் நடைபெற்றது. இதில் 120 ஆசிரியர்கள் பயன்பெற்றனர். CBG, ECG மற்றும் BP ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டன. மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. அவர்கள் பணியின் போது இதய நோய் ஏற்படுவதால் ECG எடுத்து மருத்துவர் ஆலோசனை பெற்று உயர் சிகிச்சைக்கு செல்ல இந்த முகாம் அனைவருக்கும் உதவியாக இருந்தது என்று கூறினார்கள். அனைவருக்கும் மகிழ்ச்சி.

## 3. இரத்த தான முகாம்: Besant Nagar





13.04.2025 அன்று காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அடையாறு பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்தில் குருத்து ஞாயிறை முன்னிட்டு St. Thomas மருத்துவமனையின் மூலம் இரத்ததான முகாம் நடைபெற்றது. இயேசுவின் இரத்தம் நமக்கு வாழ்வு கொடுத்தது. நமது இரத்தத்தையும் பிறருக்கு கொடுக்கும் பொழுது அவர்கள் நிறைவான வாழ்வு பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் 70 பேர் இரத்ததானம் செய்தார்கள். இதனை பொறுப்பேற்று வழிநடத்திய Sr. Sebastine மற்றும் Sr. Sheeba அவர்களுக்கு எங்களின் நன்றிகள்.

## 4. இலவச மருத்துவ முதலுதவி முகாம்: St. Thomas Mount, Basilica

13.04.2025 – 18.04.2025 ஆகிய நாட்களில் St. Thomas Mount, Basilica -ல் இலவச முதலுதவி St.Thomas Hospital நிர்வாகத்தால் நடத்தப்பட்டது. இயேசுவின் பாடுகளின் பாதையை தியானிக்க, திருப்பலி மற்றும் சிலுவை பாதை நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த ஏராளமான மக்கள் இதில் பயன்பெற்றனர். வாய்ப்பு வழங்கிய Rev. Fr. A.D Michael அவர்களுக்கு நன்றிகள்.

## 5. CMAI – Regional Meeting: St. Thomas Hospital

24.04.2025 அன்று மாலை 5.00 மணியளவில் CMAI – Tamilnadu Christian Health Care Organizations Network Chapter – St. Thomas Hospital – லில் நடைபெற்றது. இதில் சிறப்பாக NABH 6th Edition பற்றியும் Catholic Mission Organizations –ல் நடைபெறும் 15 Day, 30 Days மற்றும் 3 Month Training பற்றியும் எடுத்துரைத்தார்கள். மேலும் செவிலியர்களுக்கான Soft Skill Training–பற்றியும் சொல்லப்பட்டது. மேலும் இதில் CSI Catholic Mission Members, CHAT Members ஆகியோர் பங்குபெற்றனர். இதில் பங்கு பெற்றோர் எண்ணிக்கை 30 பேர். அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. மருத்துவத்துறையின் வளர்ச்சியினை அறிந்து கொள்ளவும், இத்துறையை சார்ந்த பல்வேறு அமைப்புகளுடன் உறவு ஏற்படுத்திக்கொள்ளவும் இது ஒரு வாய்ப்பாய் அமைந்தது.



## 6. மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி:





12.06.2025 அன்று St. Thomas மருத்துவமனையில் மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவியானது Rotary Club Of Madras East அவர்களின் உதவியுடன் வழங்கப்பட்டு துவங்கி வைக்கப்பட்டது. இக்கருவியின் மதிப்பு ரூபாய் 52 லட்சம். இதனை நமக்கு வழங்க உதவியாக அமைந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் சபையின் சார்பாக இதயம் நிறைந்த நன்றிகள். Rtn. N.S. Saravanan, District Governor, Rtn. P. Muthu, President, Rtn. Sandhya Arunkumar, Director health Rotary, Rev. Sr. Christu Rani, Assistant Superior General, FSJ Congregation ஆகியோர் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக் கொண்டு சிறப்புச் சேர்த்தார்கள்.

இக்கருவி நம் St.Thomas மருத்துவமனையில் அமைப்பதன் முழுமையான நோக்கம்:

“மார்பக புற்றுநோய் இல்லா உலகம் பார்க்க வேண்டும்! பெண்கள் வாழ்வு ஏற்றம் பெற வேண்டும்!”. இதனை கருத்தில் கொண்டு FSJ பெண்கள் குழுவினை சார்ந்த 25 விதவை பெண்கள், நம் சபையில் வேலை செய்யும் 25 பெண்கள் மற்றும் 25 அருட்சகோதரிகள் (FSJ, CTC, FBS, SSAM, FIHM, OSM, FDCC) ஆகியோருக்கு வருமுன் காப்போம் என்ற முறையில் இலவசமாக மார்பக ஸ்கேன் (Mammogram) Test எடுக்கப்பட்டு வருகிறது.

நம் நிறுவுனர் தந்தை ஜான் ஆலன் பெண்களின் வாழ்வுக்காக தனியாத தாகம் கொண்டது போல் அவரின் அடிசுவட்டை பின்பற்றி பெண்கள் நலனில் தனியாத தாகம் கொண்டிருக்கும் நம் சபை தலைமை அன்னை M. Arockiam, சபை நிர்வாக குழு சகோதரிகள் மற்றும் அனைத்து அருட்சகோதரிகளுக்கும் பாராட்டுகளும், நன்றிகளும்.

St.Thomas மருத்துவமனையில் இக்கருவியினை அமைத்து இலவசமாக பெண்களை பாதுகாக்க முயற்சிக்கும் Sr. Dr. Mary Jenova, மருத்துவமனையின் அனைத்து அருட்சகோதரிகள் மற்றும் மருத்துவர்களுக்கும் எங்களின் இதயம் நிறைந்த நன்றிகள்.

மார்பக புற்று நோயினை ஒழிப்போம்!
பெண்கள் வாழ்வில் ஏற்றம் காண்போம்!

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

---

# HAPPY GRANDPARENTS DAY TO ALL FSJ AMMA'S

**DATE: 26.07.2025**



# COMMUNICATION COMMISSION

## SELF AWARENESS:





“மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு” நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல் பாதுகாப்பு நகர திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்புக்காக “அவள்” (Avoid Violence through Awareness and Learning) என்ற திட்டத்தின் மூலம் பள்ளி, கல்லூரிகள் மற்றும் பணிபுரியும் பெண்கள் என மொத்தம் 50,000 பெண்களுக்கு சிறப்பு பயிற்சியாளர்களைக் கொண்டு தற்காப்புப் பயிற்சி அளிப்பது என்ற திட்டத்தின் மூலம் முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 23.05.2025 அன்று புனித தோமையார் மருத்துவமனையில் பணிபுரியும் பெண்களுக்கு “பெண்ணே துணிவு கொள்” என்ற தலைப்பில் “அவள்” திட்டத்தின் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் அவர்கள் தங்களை எவ்வாறு தற்காத்துக்கொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையில் தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெண்கள் ஆர்வமுடன் தங்களின் முழு ஈடுபாட்டோடு பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் இறுதியில் பெண்கள் தாங்கள் மனதளவில் தைரியம் அடைந்துள்ளோம் என பயிற்சியாளர்களிடம் தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டது இந்த பயிற்சியின் வெற்றியாகும். பங்கேற்ற அனைவருக்கும் சென்னை பெருநகர காவல்துறையின் சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வினை எம் மருத்துவ பணியாளர்கள் பயன்பெறும் பொருட்டு ஏற்பாடு செய்த எம் புனித தோமையார் மருத்துவமனை நிர்வாக குழுவினருக்கு எங்களின் நன்றிகளும்! பாராட்டுகளும்!

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

---



## *Congratulations!*

*Tamil Nadu School of Nursing Association*
*(TN-SONA) State Level*
*Top Rank GNM Nursing Student Award*
*Ms. NIVETHA .A*
*Scored - 591/700*
*1st Rank in 2nd Year DGNM Course*
*And Exam conducted by the Board of Nursing*

# சமூக பணிக்குழு

## 1. கோடைக்கால எம்ராய்டிங் பயிற்சி




1. ஆயர் ஜான் ஆலன் மாநிலம் திருச்சி சமூக பயன்பாட்டு பணிக்குழு சார்பாக புனித தெரசா தொடக்கப்பள்ளி மாணவ–மாணவிகளுக்கு ஆரி ஒர்க் பயிற்சியாளர் திருமதி. அஞ்சலிதேவி அவர்களால் 15.04.2025 அன்று கோடைகால எம்ராய்டிங் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 20 மாணவிகள் பங்கு கொண்டு கற்றுக் கொண்டனர். கைத்தொழில் ஒன்று கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்ற கூற்றை நிறைவேற்றும் விதமாக பெண் குழந்தைகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது என்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இப்பயிற்சியானது ஏப்ரல் 15 முதல் மே 15 வரை நடைபெற்றது.

## 2. மரியம்மா சிறப்பு பள்ளி ஆண்டு விழா




2. 23.04.2025 அன்று மரியம்மா சிறப்பு பள்ளியில் 9ஆம் ஆண்டு விழா இனிதே நிறைவடைந்தது. சிறப்பு விருந்தினர்களாக நம் சபையின் பொது ஆலோசக சகோதரி Sr. P.Arul Mary, சென்னை மாநில தலைவி சகோதரி Sr. Stella Mary மற்றும் அருட்சகோதரிகள், அருட்தந்தையர்கள் பிள்ளைகளின் பெற்றோர் என்று அனைவரும் கலந்து கொண்டனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். இந்த ஆண்டு விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் மற்றும் எங்களின் மனமார்ந்த நன்றிகள்.

## 3. சிறைபணி :

மாநில அளவிலான சிறைப்பணி கூடுகையானது 28.04.2025 முதல் 29.04.2025 சேலம் மறைமாவட்டம் ஏற்காட்டில் நடைபெற்றது. இக்கூடுகையில் 180 தன்னார்வலர்கள் கலந்து கொண்டார்கள். மேதகு ஆயர் நீதிநாதன் தமிழக சிறைபணி தலைவர் அவர்கள் பொறுப்பேற்று இக்கூடுகையை சிறப்புடன் நடத்தினார்கள். இக்கூட்டத்தின் தலைப்பாக “என்னை தொட்டவர் யார்”? என்ற இறைவார்த்தையை மையப்படுத்தி பேசப்பட்டன. இக்கூடுகையில் அனைத்து மறைமாவட்டத்தின் சார்பாக சிறைபணி ஆண்டு அறிக்கையானது சமர்பிக்கப்பட்டன. அதில் மாநில அளவிலான வரவு செலவுகளை அருட்சகோதரி. ஸ்டெல்லா ரத்தினம் அவர்கள் சமர்பித்தார்கள். செங்கல்பட்டு மறைமாவட்டத்தின் சார்பாக நமது சபை சகோதரிகள் Sr. Marina மற்றும் Sr. Fransis Papu ஆகியோர் கலந்து கொண்டு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். இக்கூடுகைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சேலம் மறைமாவட்ட ஆயர் அருட்செல்வம் ராயப்பன் அவர்கள் தலைமையில் அருட்பணி. டேவிட் பொறுப்பேற்று சிறப்பாக செய்திருந்தார்கள். இக்கூடுகை உளவியல், சட்டம் சார்ந்த தெளிவுகள், சிறைவாசிகள் எவ்வாறு கையாளுவது என்பது பற்றி தெளிவுப்படுத்தப்பட்டது. இதன் வழியாக கூடுகையில் கலந்துக்கொண்ட அனைவரும் பயனடைந்தனர்.





## 4. இளம்பெண்களுக்கான கருத்தமர்வு (FIT Foundation)



நமது சபையில் புதிதாக தொடங்கப்பட்ட 17 வயது நிரம்பிய பெண்களுக்கான கருத்தமர்வு 07.05.2025 – 08.05.2025 வரை தலைமையகத்தின் சார்பாக நடைபெற்றன. இதில் 18 பெண்கள் கலந்து கொண்டார்கள். முதல் நாள் அருட்பணி. ஜஸ்டின் MSFS அவர்களால் இளம்வயதில் வாழ்க்கையை எவ்வாறு எல்லாம் அமைத்துக் கொள்ளலாம் என பல வழிவகைகளை நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து வழிகாட்டினார்கள்.

இரண்டாம் நாள் கல்வியும் எதிர்காலமும் பற்றி திருமதி. கெலினா மற்றும் திருமதி. கிறிஸ்டி அவர்களால் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டன. இதன் வழியாக பிள்ளைகள் எதை கற்றால் எதிர்காலத்தில் தரமான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பது பற்றியும் அரசு பணிகளில் அமர எவ்வாறு முயற்சிக்க வேண்டும் என்பதையும் அறிந்துக் கொண்டார்கள். இதற்கான உணவு, இடவசதி போன்றவைகளை சபை பொருளாளர் சகோதரி. Celia அவர்களும், Louis Convent Superior, Sr. Angelina அவர்களும் இணைந்து சிறப்பாக செய்திருந்தார்கள். நிகழ்வுகள் அனைத்தும் நடைபெற சபை தலைமை சகோதரி M. Arockiam அவர்களும், ஆலோசக சகோதரி அருள்மேரி அவர்களும் அனுமதி தந்து சிறப்புற செய்தனர். இதனை முன்னின்று நடத்திய Sr. Marina அவர்களுக்கு நன்றிகள்!

## 5. பெண்கள் எதையும் சாதிக்ககூடியவர்கள்:



27.04.2025 அன்று நேதாஜி நகர் அசிசி இல்லத்தில் நமது சபையின் கீழ் இயங்கும் மகளிர் சுயஉதவி குழுவிலிருந்து 15 பெண்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு திருமதி. கெலினா, திருமதி. பிரபா மற்றும் ஆனந்தி இவர்களால் பெண்களின் வாழ்வாதாரம் உயர என்னென்ன வழிகள் என்பதை பற்றிய கருத்தமர்வு ஒருசிறிய செபத்தோடு ஆரம்பமானது சகோதரி. மெரினா அவர்கள் வரவேற்றார்கள். பெண்களிடம் நீங்கள் எந்த நோக்கத்திற்காக வந்தீர்கள் என்பதை ஆய்ந்து ஆராய அவர்களை கலர் விளையாட்டு வழியாக படம் வரைந்து அதன் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கலர் கொடுக்க சொன்னார்கள் அதன் வழியாக எதை முதன்மை படுத்துகிறீர்கள் என்று கேட்டார்கள். ஒவ்வொருவரும் வித்தியாசமான கருத்துக்களை கூறினார்கள். கலரோடு ஒப்பிட்டு பார்த்து ஒவ்வொரு கலருக்கும் அதன் அர்த்தத்தை புரிய வைத்தார்கள்.

இதில் கலந்து கொண்ட பெண்களுக்கு இந்த பயிற்சி ஒரு உந்து சக்தியாகவும் தன்னம்பிக்கையை வளர்க்க கூடியதாகவும் அமைந்தது. கலந்துக் கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# PROJECT COMMISSION

## VISIT TO EUROPE





On behalf of our congregation, and with the approval of the Council, our Mother General, Rev. Sr. Arockiam, delegated Sr. Susai Mary and Sr. Arul Mary for a visit to Europe.

The main purpose of this visit was to explore opportunities for international collaboration with funding agencies for the development welfare and development of the target groups of the charism of our Congregation. It was also an occasion to personally express our heartfelt gratitude to all the benefactors who have rendered their unwavering support towards the growth of our mission.

We visited Italy, Germany, and Netherlands, where we met several agencies and presented in detail the various ministries and charitable works undertaken by our Congregation. The agencies were highly impressed by our mission and greatly appreciated the initiative taken by the Congregation to meet them in person.

We, too, experienced the value and impact of face-to-face interactions—it truly strengthens relationships and fosters mutual understanding.

We extend our sincere gratitude to our Mother General Rev. Sr. M. Arockiam and the Council team for granting us this wonderful opportunity to undertake the Europe visit.

**Sr. Arul Mary**
*Project Commission, Co-ordinator*

---

# Congratulations!

திருவாரூர் மாவட்டம், கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் (EQUIP)
கீழ் தேசிய வருவாய் வழி மற்றும்
திறன்படிப்பு உதவித் தொகை (NMMS)
தேர்வில் 2024 – 2025 சிறப்பாக செயல்பட்ட
சகோ. **ஆரோக்கிய மேரி ஜீவா** அவர்கள்
மணவாள நல்லூர், அ.உ.பெ. நடு. நிலைப்பள்ளியின்
தலைமையாசிரியை அவர்களை பாராட்டி
சான்றிதழ் வழங்கப்பட்டது.



# FINANCE COMMISSION

## ANNUAL AUDIT 2025

The Annual Audit serves as a vital process to ensure transparency, accountability of the financial resources entrusted to the congregation. This year, the audit was conducted at the Generalate with diligence and thoroughness, reviewing all financial transactions, records, and supporting documents across various communities and institutions by Mr Rosario, Mr. L Rani and his team of Auditors.

The audit team, in collaboration with the General and Provincial Economers, assessed the compliance of financial practices with established guidelines and regulatory requirements. Special attention was given to budgeting, expense management, and fund allocation for all the activities.

### North Province Annual Auditing 2024-25 (05.04.2025 to 19.04.2025)




### Chennai Province Annual Auditing 2024-2025 (11.4.2025 to 14.4.2025)




### Under the Generalate Annual Auditing 2024-2025 (09.05.2025 to 24.05.2025)




### Land Documents verified on 28.05.2025



From June 9 to 19, 2025, The audit was finalised and the worksheet documents were scanned. All the documents of the convents were checked and documented province wise.

**Sr. Celia**
*Finance Commission, Co-ordinator*

# உலக மருத்துவர்கள் தினம்

ஜூலை 1st

குணப்படுத்தும் கரங்கள்
அக்கறையுள்ள இதயங்கள்
உயிர்காக்கும் உன்னத சேவை
செய்யும் மருத்துவர்களே!

மருத்துவர்கள் இரண்டாம் இறைவன்
நீங்கள் ஒரு அற்புதமான மருத்துவர்
என்று சொல்வதற்கு முன் நீங்கள்
அற்புதமான மற்றும் கனிவான
மனிதன் என்பதை நான் உங்களுக்கு
சொல்ல விரும்புகிறேன் மருத்துவர்களே!

இரவு பகல் பாராது
இனிய முகத்துடன் தன்
கரம் தொட்டு சிகிச்சை அளிக்கும்
மேலான பண்புள்ளம் கொண்டவர்கள்
மருத்துவர்களே!

மனநோயோ உடல்நோயோ
உதிரம் கொட்டி உணர்வுகள் மறந்து
உயிர் பிரியும் வேளையிலும்
உயிர் கொண்டு பேணி
உயிரை உடலிடம் மீண்டும்
கொடுப்பவர்கள் மருத்துவர்களே

முள் குத்தினாலே கத்தும் நாம்
டாக்டர் ஊசி போடும்போது
மட்டும் தாங்கிக் கொள்வோம்
வலி என்னவோ ஒன்றுதான்
ஏற்றுக் கொள்ள துணிந்து விட்டால்
வலிகளும் வேதனைகளும் தூசிதான்
என்று பொறுமையுடன், பக்குவமாக
புரிய வைத்து சுகம் தருபவர்கள்
மருத்துவர்களே!

நம்பி வருவோரின் நலன்காக்க
தன்னுடல் பேண நேரமில்லாது
தனக்கான நேரங்களையும் தொலைத்து
தன்னலம் பாராது உழைக்கும்
உள்ளங்கள்
மருத்துவர்களே!

உறவுகள் வெறுத்து
உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பு
இல்லாமல், நிம்மதியிழந்து
தவிக்கும் உள்ளங்களுக்கு
ஆரோக்கியம் தந்து ஆயுளை
நீடிக்க செய்பவர்கள் மருத்துவர்களே!

இறைவன் படைப்பில்
சிறந்த படைப்பாக
மருத்துவ உலகில் சுற்றும்
வெள்ளை புறாக்கள் மருத்துவர்களே!

உடல் என்னும் வகை அறிந்து
நோய் தணிக்கும் முறை தெரிந்து
உயிர் காத்து தலைநிமிர்ந்து
மனிதம் காக்க மாதவம் புரிந்து

மனித வடிவில் தெய்வமாய்
வாழ்ந்து கொண்டிருக்கும்
அனைத்து மருத்துவர்களுக்கும்
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
வாழ்த்துகிறோம்! மருத்துவர்களே!

**சகோ. மார்தாள், வ.பி.ச.**
மாண்டசோரா





## பஞ்சாமிர்தம் *in to* இறையமிர்தம் ஜூலை 3rd

புனித தோமையாயின் உள்ளம் இயேசுவை கண்ட நொடிப்பொழுதில் சொல்லொன்னா வேகத்தில், உள்ளம் உருக! பற்றியெரிந்த “அன்பு கனல்”.

“என் ஆண்டவரே! என் தேவனே!” என்ற நம்பிக்கையறிக்கையை நாவால் உளமாற எடுத்தியம்பசெய்தது. இவர் இந்தியாவின் புனிதர். புனித தோமையார் இயேசுவின் உயிர்ப்பை அவரை கண்டபின் தான் நம்பினார் என்பதால், புனித தோமையார் சந்தேகித்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல மேலும் பயணிப்போம்.

ஆன்மீகத்தில் பஞ்சாமிர்தம் என்றால் அன்பு, அக்கறை, புரிந்துகொள்ளல், உடனிருப்பு, பிளவுபடா உறவு என்ற ஐந்தும் கலந்த நிலையே பஞ்சாமிர்த நிலை. இந்நிலை இறைவன் மீது கொண்ட பேரன்பினால் எழுவதால் பஞ்சாமிர்தம் இறையமிர்தம் ஆகிறது. இதுதான் புனித தோமையாரின் இறையன்பு நிலை.

தான் தன்னைவிட நேசிக்கும் உறவை மற்றவர்கள் வழியாக அனுபவிப்பதை விரும்புவதில்லை. தன்னோடு நேரடியாக உறவிலிருந்த இயேசு உயிர்த்தார் என்பதை தன் கண்களால் காணமுடியவில்லையே என்ற ஏக்கம் “மற்றவர்கள் கூறுவதை ஏற்க மறுத்தது” ஆகையால்! தன் உள்ளுணர்வை, “அவரை கண்டு தொட்டுணர்ந்தால் மட்டுமே நம்புவேன்” என்று கொட்டி தீர்த்தார். ஆனால் உள்ளத்தால் அவருக்காக காத்திருந்தார்.

புனித தோமையின் உள்ளகுமுறலை அரூபியாய் அவரருகில் இருந்து கண்ட இயேசு அவர் ஏக்கம் தீர்க்க தரிசனம் தந்தார். புனித தோமையாரின் பெயர் சொல்லி அழைத்து தன்னை நேரடியாக காண்பித்தார். இங்கே தோமையின் ஆன்மீக பஞ்சாமிர்தம் இயேசுவின் அன்பில் கலந்து இறையமிர்தம் ஆனது.

இயேசுவின் தூய இருதயத்தில் கலந்தநொடியில் புனித தோமையின் உள்ளம் பல்வேறு நல் மாற்றங்களை அடைந்தது. தூய ஆவியை பெற்றுக் கொண்ட பின், பல நாட்கள் பட்டினி கிடந்த சிறுத்தை சீறிபாய்வதைபோல் இயேசுவின் அன்பை போதனையால் மக்கள் மனதில் பதித்தார். மொழி, இனம், கலாச்சாரம் இவைகளை தாண்டி தன்னையே இயேசுவுக்காக இழக்கும் மனவலிமை கொண்டார்.

புனித தோமையாரின் காலத்தில் இந்தியாவின் நிலையானது யாரும் நுழையாதபடி மின்கம்பம் அமைத்து மின் வேலி கட்டியது போல் பல்வேறு சமூக ஏற்ற தாழ்வுகளும் கொடுமைகளும் செய்திருந்தன. இதனை சிறிதும் பொருட்படுத்தாமல் இயேசுவின் அன்பனாக எண்ணிலடங்கா துணிவோடு இந்தியாவில் காலடி பதித்தார். பஞ்சபூதங்களும் அவருக்கு துணை நின்றன. சிறிதும் தயக்கமின்றி அன்றைய மேல்தட்டு மக்களுக்கு போதித்தார். அவர்களை மனம்மாற செய்தார். இயேசுவின் பெயரால் புதுமைகள் பல செய்தார். புனித தோமையாரின் முதல் புதுமையானது எல்லோரையும் உலுக்கியது. தன் கரங்களால் தண்ணீரை அள்ளி விண்ணிற்க்கு வீசினார். வீசப்பட்ட நீர் அப்படியே நின்றது. ஓரிரு நிமிடங்கள் அல்ல. காலை முதல் மாலை வரை நின்றது. தண்ணீர் அள்ளப்பட்ட இடத்திலோ தண்ணீர் அள்ளியதன் அடையாளமாக பள்ளம் இருந்தது. இதை கண்ட மதக்குருக்கள் மனம்மாறினர். பாமர மக்களும் அவரது போதனைகளை உளமாற ஏற்றனர்.

“தோமா” என்ற கிரேக்க சொல்லுக்கு “இரட்டையன்” என்று பொருள் திதிமு என்றும் தோமா அழைக்கப்பட்டார். கலிலேய பகுதியை சார்ந்த இவர் முதலில் தச்சு தொழிலையே செய்து வந்தார். அதன் பின்னர் மீன் பிடிக்கும் தொழில் செய்தார். அவருடைய 29ம் வயதில் இயேசுவின் சீடரானார்.

தனது நற்செய்தி பணியை பார்த்தியா, மேதியா, பெர்சியா, சிக்கானியாவில் செய்தார். பின்னர் தரைவழி பயணம் செய்து சிந்து சமவெளி பகுதிகளில் போதித்தார். அதன் பின்னரே கேரளம் தமிழ்நாடு வந்தார்.

புனித தோமாவை ஹப்பான் என்கிற வணிகர் இந்தியாவிற்கு அழைத்து வந்தார். ஹப்பான் அன்று இந்தியாவை ஆண்ட கொண்டோபோரோஸ்க்கு புனித தோமாவை அறிமுகம் செய்து வைத்தார். கொண்டோபோரோஸை தோமையின் போதனை கவர்ந்தது. எனவே கொண்டோபோரோஸ் தனக்கு ஒரு அரண்மனை கட்டிக்கொடுக்க வேண்டும். என்று புனித தோமையை கேட்டுக்கொண்டான். தோமாவும் ஒப்புக்கொண்டார். அரசன் வழங்கும் ஏராளமான பொருட்களை ஏழை மக்களுக்காகவும், போதனைகளுக்கும் செலவழித்தார். தோமையாரின் அந்த செயலை அரசன் கொண்டோபோரோஸ் அறிந்த போது சினம் கொண்டு தோமாவை வரவழைத்தார். தோமா அரசனிடம் தான் அவருக்கான அரண்மனையை விண்ணுலகில் கட்டுவதாகவும் இவ்வுலக செல்வம் அழிந்து போகும் என்றும் கூறினார். ஆத்திரமடைந்த அரசன் தோமாவையும் அவரை அறிமுகம் செய்த ஹப்பானையும் சிறையில் அடைத்தார்.

அரசன் கொண்டோபோரோஸின் சகோதரன் காத் என்பவன் மரணப்படுக்கையில் இருந்த போது அவனை ஒரு தேவதூதர் விண்ணகம் கொண்டு சென்று தோமா கட்டிய அரண்மனையை காண்பித்தார். பின்னர் அவன் இறந்தான். அவனை தோமா உயிர்பெற்றெழ செய்தார். உண்மையை உணர்ந்த அரசன் தோமாவையும், ஹப்பானையும் விடுதலை செய்தார்.

இந்தியாவின் தென்பகுதியில் சேரர் ஆட்சியின் போது கேரள மலபார் பகுதியிலும் கன்னியாக்குமரி, தமிழ்நாடு என தன்னுடைய போதனையை தொடர்ந்தார். புனித தோமையாரின் போதனைகளுக்கு செவிமடுத்து மனமாறுவதை கண்ட சினம் கொண்டு அவரை பழிவாங்கும் நோக்குடன் ஒருவர் தன் இறந்த மகனை ஓரிடத்தில் புதைத்துவிட்டு, தோமாதான் தன் மகனை கொன்று புதைத்ததாக குற்றம் சாட்டினான். இதனை கேட்ட தோமா சிரித்துகொண்டு இவ்விடத்திற்கு வந்து இறந்த அவனுக்காக செபித்தார். இயேசுவின் பெயரால் நான் உனக்கு கட்டளையிடுகிறேன். எழுந்துவா! என்று தோமா கூறியதும் இறந்த அவன் உயிருடன் வந்தான். இதனை கண்ட அனைவரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டனர்.

தோமா சில பாடல்களையும் இயற்றியுள்ளார். அதில் 1.ரப்பான் தோமை 2.வீரத்தியன் 3. மார்க்கம் களியாட்டம் என்பனவாகும். புனித தோமையார் உள்ளத்தில் பொங்கி வழியும் அன்பினால் உந்தப்பட்டவராய் தன் நற்செய்தி பணியை சிறப்புடன் ஆற்றி வந்தார்.

இறுதியில் அவரை பிடிக்காதவர் ஒருவர் வஞ்சனையுடன் அவர் செபித்துக் கொண்டிருக்கும் போது பின்பக்கமாக அவரது முதுகில் ஈட்டியால் துளைத்தார். கற்சிலுவையை அனைத்தபடி தோமையார் உயிர்துறந்தார். தனது இரத்தம் மண்ணை நனைக்க, உடல்கிழியும் அளவிற்கு இயேசுவின்மீது அன்புகொண்டார். தன் ஜீவனை அவரின் தூய இருதயத்தோடு பிணைத்துக் கொண்டார்.

விண்ணக வீட்டில் சிறப்பிடம் பெற்று இறைபுகழ் பாடிக்கொண்டிருக்கும் தோமையின் செப அலைகள் இன்றளவும் மண்ணில் புதுமைகளை செய்வதோடு நற்செய்தி பணியும் செய்து கொண்டிருக்கின்றது.

இறை ஆவியால் உருவாக்கப்பட்ட உள்ளத்தில் வழிந்தோடிய ஆண்டவருக்கான ஆன்மீக "பஞ்சாமிர்தம்" இறைவனில் கலந்து "இறையமிர்தம்" ஆனது!!!



**Sr. Lumina, fsj**
St. Thomas Convent



மலர்ந்தது: 24.04.1939

உதிர்ந்தது: 17.06.2025

# அருட்சகோதரி. மேரி லில்லியான் அவர்களின் விண்ணக பயணம்

"மண்ணுலகம் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை,
நிலவுலகம் அதில் வாழ்வன அவருக்கே சொந்தம்"!

Rev. Sr. Mary Lillian, fsj அவர்கள் கேரள மாநிலம் கோட்டயம் மறை மாவட்டத்தில் கீழ்த்தடியூர் என்ற ஊரில் 1939ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதி அன்று திரு. லூக்கா, திருமதி. மரியம்மா அவர்களுக்கு பிறந்த ஆறு குழந்தை செல்வங்களில் கடைசியாக பிறந்தவர். சிறு நன்மையான காரியங்கள் இறைவன் வழியாய் நிறைவேறும் என்ற ஆசையுடன் தனது அழைப்பை ஏற்று FSJ சபையில் சேர்ந்து 1961ல் முதல் அர்ப்பண வாக்குறுதியும் 1967 இறுதி அர்ப்பண வாக்குறுதியும் அளித்தவர்கள். 1986ல் தனது அர்ப்பண வாழ்வில் வெள்ளி விழாவையும், 2011ல் பொன்விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தவர்கள்.

துறவற வாழ்வின் எடுத்துக்காட்டாய் விளங்கியவர் Rev. Sr. Mary Lillian, கல்விப்பணியிலும், செபத்திருத்தூது பணியிலும், தன்னை கரைத்து வேப்பேரி, திருவெற்றியூர், செயின்ட் தாமஸ் மவுண்ட் R.C.M School, Walajabad, Nagalur, Avadi, Georgr Town, பெரம்பலூர், எளம்பலூர், லூயிஸ் இல்லம், செயின்ட் தாமஸ் மருத்துவமனை என்று பல இடங்களில் கல்விப்பணியிலும், முதியோர் மற்றும் குழந்தைகள் காப்பக பணியிலும் தலைமையாசிரியர், இல்ல பொருப்பாளராய் பெண்களை காத்து அரணாக இருந்து மிகத் திறமையுடனும், அன்புடனும், பொறுமையுடன் பொறுப்புகளில் பணியாற்றியவர்கள் புன்முறுவலுடன், மிகுந்த அக்கறையோடும் கரிசனையோடும் எளியோரை பாதுகாத்தவர்கள். இவர் ஏழை குடும்பங்களிலும், பெண்களின் வாழ்விலும் நம்பிக்கை ஒளியேற்றியவர்கள்.

உடல் உழைப்பால் சகோதரிகளுக்கு முன் மாதிரியாய் வாழ்ந்தவர்கள். Rev. Sr. Mary Lillian, இயற்கை, சமுதாயம், உடல், மனம் சூழல், பழக்கங்கள், காலங்கள் என்று அனைத்தையும் ஒன்றிணைந்து அற்புத பெட்டகமாக வாழ்ந்தவர்கள். கோல்ஊன்றி சென்ற முதியவர்களை தாங்கி பிடித்தவர்கள். Rev. Sr. Mary Lillian, தனது அகவாழ்வில் ஒளியேற்றிய இறைவனை நாளும் துதித்தவர்கள். அதிகாலை செபம் அம்மாவிற்க்கு பிடித்தமானது முதல் சகோதரியாய் கோவிலில் அமர்ந்து செபம் செய்வார்கள். சோதனைகளை வெல்ல செபத்தோடு ஒன்றித்தவர்கள். இப்படி வாழ்ந்த அம்மா கடந்த இரண்டு வருடங்களாக நலிவுற்று நடக்கமுடியாமல் St. Thomas மருத்துவமனையில் படுத்தபடுக்கையானார்கள். வயது முதிர்வின் காரணமாக தனது 86ம் வயதில் இம்மண்ணக வாழ்வை துறந்தார்கள். வாழ்ந்த காலம் சொல்கிறது வாழ்வு அற்புதமானது என்று இதுவே அவர் நமக்கு சொல்லும் பாடம். இத்தகைய அன்னையை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுவோம். Rev. Sr. Mary Lillian, அவர்களின் ஆன்மா நித்திய சாந்தி அடைய நாம் அவருக்காக செபிப்போம்.

# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## JULY

2025

1st Sr. Amalorpava Mary .M
Sr. Rajeshwari Pradhan
Sr. Saindri Digal
Sr. Alambari

2nd Sr. Akalya
Sr. Maria Selvi A.

3rd Sr. Jancy Rani .A
Sr. Gnana Soundari

5th Sr. Shantha Mary
Sr. Fathima Maduram

7th Sr. Nalini Pradhan

8th Sr. Mary Celine .A

10th Sr. Leema Mary Stella

11th Sr. Kumari Fell
Sr. Shirley T.P.
Sr. Carmel
Sr. Maria Stella Sandra
Sr. Fathima Mary

12th Sr. Sagaya Mary Rayappan
Sr. Mary Clara

13th Sr. Mary Flora
Sr. Sammanusa Mary .S

15th Sr. Christy J.

16th Sr. Antony James Sheeba

17th Sr. Scholastica Mary
Sr. Amali Swaminathan

18th Sr. Louisal Susai Pillai
Sr. Iswarya Anto Joy

19th Sr. Judith Stianislaus
Sr. Pushpa Rakkini
Sr. Avila Theresa

21st Sr. Sagaya Mary
Sr. Arockia Mary Arputha
Sr. Hasina Digal

23rd Sr. Isabella Mary .G
Sr. Madalene Lazar
Sr. Elizabeth Rani .I
Sr. Margaret .A

25th Sr. Hilda Juliet
Sr. James Metilda

26th Sr. Antoniammal Savarimuthu

27th Sr. Jaya Mary A.
Sr. Yashoda Digal

28th Sr. Philomina Arockiasamy
Sr. Jecintha Mary .I
Sr. Benedicta Epsy
Sr. Celine Devasagayam
Sr. Swetha .D

30th Sr. Alphonse Fernando
Sr. Mary Seline .G

31st Sr. Sheela Prem Kumari




*Be happy & Stay blessed*

# Beloved Sisters...



# Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Little Flower (S.G.IX) | 01.07.2010 |
| Sr. Mary Andrew | 02.07.1984 |
| Sr. Mary Stanislaus | 04.07.1998 |
| Sr. Mary Emmanuel | 04.07.2018 |
| Sr. Mary Regina | 07.07.1977 |
| Sr. Mary Metilda (S.G.XII) | 07.07.2014 |
| Sr. Mary Ursula | 09.07.1986 |
| Sr. Mary Melanie | 10.07.1991 |
| Sr. Mary Patricia | 11.07.2005 |
| Sr. Mary Zita | 14.07.2008 |
| Sr. Mary Cordula | 16.07.2000 |
| Sr. Mary Sylvia | 18.07.2023 |
| Sr. Mary Bosco | 22.07.1988 |
| Sr. Mary Felicita | 27.07.2020 |
| Sr. Queen Mary | 27.07.2024 |
| Sr. Mary Anne | 31.07.1953 |
| Sr. Mary Sabina | 31.07.1986 |
| Sr. Mary Concilia | 31.07.1998 |
| Sr. Mary Monica | 21.07.2022 |
| Sr. Baby Ruffina | 26.07.2022 |

*May their souls Rest in Peace*

# சமூக தொடர்பு பணிக்குழு

## வேண்டுகோள்!



"**உறவே நீ பேசு**" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 72 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## புனித தோமையார் பெருவிழா நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*



VOCATIONAL CAMP CHENNAI



GENERAL COUNCIL MEETING FOR OUR NOVICES AT OUR GENERALATE



VOCATIONAL CAMP - TRICHY





IFC - TOR GENERAL ASSEMBLY - ITALY

# Congratulations!



FINAL PROFESSION



FIRST PROFESSION